**செ.வெ.எண்: 45 நாள்: 23.08.2021**

# நாகப்பட்டினம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 24 மணி நேரமும் செயல்படகூடிய கொரோனா தடுப்பூசி மையம் இன்று (23.08.2021) மாவட்ட ஆட்சியர் துவங்கி வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 24 மணிநேர கொரோனா தடுப்பூசி மையத்தினை துவங்கி வைத்து, ஜெகநாதபுரம் சீயோன் சர்ச் மற்றும் மஞ்சக்கொல்லை ஊராட்சி பள்ளி வாசல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று 23.08.2021 பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி மையத்தில் 3 நபர்கள் கொண்ட குழு சுழற்சி முறையில் பணியாற்றுவார்கள் எனவும் இம்மாவட்டத்தில் இதுவரை இருந்த தடுப்பூசி பற்றாக்குறை தீர்ந்து தேவையான தடுப்பூசிகள் உடனுக்குடன் கிடைக்குமாறு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

அடுத்த ஒரு வாரத்திற்கு இம்மாவட்டத்தில் 6 வட்டாரங்கள், 2 நகராட்சிகள், 4 பேரூராட்சிகள், 27 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5 அரசு மருத்துவ மனைகள் மற்றும் நாகப்பட்டினம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை உள்ளன. அவற்றில் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 5 மருத்துவமனைகள், 27 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராமம் மற்றும் நகரப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம்களில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரிய வாய்ப்பை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இம்மாவட்டத்தில் 16.01.2021 முதல் இதுவரை முதல் தவணையாக 2,13,980 நபருக்கும், இரண்டாவது தவணையாக 31,714 நபருக்கும் மொத்தம் 2,45,694 நபருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதில் மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், மூன்றாம் பாலினத்தவர் மற்றும் மீனவர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை கொடுத்து தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

அடுத்த ஒரு வாரத்திற்கு நடைபெறும் தீவிர தடுப்பூசி முகாம்களில் வருவாய், ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, காவல்துறை, பள்ளிக்கல்வித்துறை, மற்றும் அனைத்து அரசு துறை சார்ந்த அனைத்து ஊழியர்கள், சுய உதவிக்குழு, வணிகர் சங்கங்கள், மற்றும் அனைத்து அரசு சாரா நிறுவனங்களும் இணைந்து நமது மாவட்ட மக்களை கொரோனா மூன்றாம் அலை பாதிக்காத அளவில் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.வி.விஸ்வநாதன், அரசு மருத்துவமனை நிலை அலுவலர் மரு.உமா மகேஸ்வரன், மருத்துவ அலுவலர் மரு.ஏ.ஆர்.முகமது உமர், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**